# மிசா சட்டம் போன்று ஒரு நெருக்கடி வந்தால்,

# முதலமைச்சர் விஜய் கட்சியை கலைத்து விட்டு ஓடி விடுவார்!

## சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

**சென்னை, செப்.14 -**

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் குறித்து அவதூறாகவும் தரம் கெட்ட வகையிலும் பேசிய முதலமைச்சர் விஜயைக் கண்டித்து சென்னை கிழக்கு மற்றும் வடக்கு, வடகிழக்கு ஆகிய மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்றது.**

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி,சேகர், வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் சபை மாண்புகளை மறந்து, சபை விதிகளை மீறி தரம் கெட்ட வகையில் உரையாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யின் செயலைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

**விஜயின் அநாகரிகப் பேச்சு!**
**கழகத் தொண்டன் ஏற்க மாட்டான்!**

நாயை குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் , அது வாலை ஆட்டிக்கொண்டு எதையோ தின்பதற்குதான் வெளியே ஓடுமாம் என்கிற பழமொழி போல், விஜயின் நடவடிக்கை உள்ளது.

முதலமைச்சர் விஜய் தனது பழைய புத்தியை காட்டும் வகையில் சட்டமன்றத்தில் செயல்பட்டுள்ளார்.

இங்கே பேசிய மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு மிகவும் ஆவேசப்பட்டு பேசினார். அவர் மட்டுமல்ல எங்கள் கழகத் தலைவரை மரியாதை குறைவாக பேசினால் கடைசி கட்ட தி.மு.க. தொண்டன் கூட அதனை ஏற்க மாட்டான், கொதித்தெழுவான்.

முதலமைச்சர் விஜயின் தரங்கெட்ட பேச்சு தி.மு.க. காரர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் நடுநிலையாளர்கள், படித்தவர்கள், அரசியல் பண்புள்ளவர்கள் அனைவர் மத்தியிலும் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. எவருமே முதலமைச்சர் விஜயின் பேச்சை ஏற்கவில்லை. இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை மு.க. ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை அவமானப்படுத்திய விஜய் அவர்களின் அநாகரிக பேச்சை கண்டித்துள்ளார்கள்.

**பழைய வரலாறை பேசினால்**
**தாங்க மாட்டாய்!**

முதலமைச்சருக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன், தி.மு.க.காரனை பேச விட்டால் உங்களது பழைய கால வாழ்க்கை வரலாற்றுகளை நாங்கள் எடுத்து விட்டால் நீங்கள் தாங்க மாட்டீர்கள்.

நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் போல் திடீரென முதலமைச்சரான விஜய்க்கு மிசா பற்றி பேசும் யோக்கியதை கொஞ்சம் கூட கிடையாது. மிசா காலகட்டத்தில் நடைபெற்ற கொடுமைகள் போல் தற்பொழுது நடைபெற்றால் நடிகர் விஜய் கட்சியை கலைத்து விட்டு ஓடி விடுவார்,

மிசா காலத்தில் நடந்த கொடுமையான நிகழ்வுகள் இன்றைக்கு உள்ள இளைஞர்களுக்கு தெரியாது. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு அவர் அனுபவித்த கொடுமைகளுக்கு நானே சாட்சி. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு மிசா சட்டம் பிரகடன ப்படுத்தப்படுவதற்கு முன் 1.2.1976 அன்று முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று ஒன்பது ஆண்டு காலம் நிறைவுற்றதை தொடர்ந்து ஒளிமிகு ஒன்பது ஆண்டு ஆட்சி என்ற தலைப்பில் கழக ஆட்சியின் சாதனைகளை நாடு முழுவதும் விளக்கி கூட்டம் நடத்துமாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது. அப்போது கொள்கை பரப்பு செயலாளராக இருந்த சிட்டிபாபுவும் நானும் காரைக்குடியில் பேசுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**வாரண்ட்டுடன் வந்த காவல் அதிகாரி!**

அதற்கு முன்பு நானும், சிட்டிபாபு அவர்களும், தாம்பரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினோம். நான் பேசிவிட்டு திருவொற்றியூர் ராஜா கடையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்து விட்டேன். ராஜா கடை பொதுக்கூட்டத்தில் நான் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதாக செய்தி வந்தது. உடனடியாக நானும் கழகத் தோழர்களும் கோபாலபுரம் சென்றோம்.

தலைவர் இல்லத்தில் கலைஞர் அவர்களும் நானும் இருந்தபோது, 1967 முதல் முதலமைச்சருக்கு செக்யூரிட்டியாக இருந்த ஒரு காவல் அதிகாரி மு.க.ஸ்டாலின் அவர்களை கைது செய்ய ஒரு வாரண்டை எடுத்து வருகிறார். நேராக வந்து கலைஞர் அவர்களிடம் மு.க.ஸ்டாலினை கைது செய்ய வேண்டும் என்று கூறியவுடன், உடனே கலைஞர் அவர்கள் ஸ்டாலின் மதுராந்தகத்தில் கட்சி தொடர்பான நாடகத்தில் நடித்துக் கொண்டுள்ளார். காலையில் வந்து கைது செய்து கொள்ளுங்கள் என்று கூறுகிறார். அதேபோல் கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்கள் மதுராந்தகத்திலிருந்து கோபாலபுரம் வந்ததும் கலைஞர் அவர்கள் ஸ்டாலினை போலீசாரிடம் ஒப்படைக்கிறார். போலீசார் அவரை மிசா சட்டத்தின் கீழ் கைது செய்கிறார்கள்.

**ஓடி ஒளியும் கூட்டம் அல்ல!**

இதுதான் தி.மு.க.வின் மிசா வரலாறு.



போலீஸ் கைது செய்யப் போகிறது என்றவுடன் உங்களைப் போல் ஓடு ஓடு என்று ஓடி ஒளியும் கூட்டம் அல்ல தி.மு.க. கூட்டம். தி.மு.க.வினர் மக்களை பாதுகாக்க, சுயமரியாதை, இனமானம், ஆகியவற்றை பாதுகாக்க நெஞ்சை நிமிர்த்தி போராடக் கூடிய தைரியம் உள்ளவர்கள். உங்களைப்போல் ரீல்ஸ் போட்டு மக்களை ஏமாற்ற மாட்டோம், கரூரில் 41 பேர் இறந்தபோது நீங்கள் ஓடிய ஓட்டத்தின் மர்மம் என்ன என்று இன்றும் மக்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். நேற்று கூட திருமாவளவன் அவர்கள் ஒரு அறிக்கையில், அப்பொழுதே விஜய் அவர்களின் மீது ஏன் எஃப்.ஐ.ஆர். போடவில்லை என்று கேட்டுள்ளார்.

கரூரில் அத்தனை பேர் இறந்தும் விஜய் அவர்களுக்கு மனசாட்சி என்று ஒன்று உள்ளதா இல்லையா என்று தெரியவில்லை. தனது கட்சி கூட்டிய கூட்டத்தில் 41 பேர் இறந்ததை பற்றி எந்த கவலையும் படாமல் ஒரு மாதம் வீட்டில் ஒளிந்து கொண்டவர்தான் விஜய் அவர்கள். ஆனால் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் இரவோடு இரவாக கரூருக்கு சென்று அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சைகளை அளிக்க, பொதுமக்களின் உயிர்களை காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுத்தார். ஏனென்றால் அவர் மக்களை மதிக்க தெரிந்தவர், மனைவி மக்களோடு வாழக் கூடியவர், மக்களின் உணர்வுகளை மதிக்கத் தெரிந்தவர்.

அப்பொழுது முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் எடுத்த துரித நடவடிக்கையால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

**நாடக மன்றமாக ஆக்கி விட்டனர்!**

இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு நாடக மன்றம் போல் ஆகிவிட்டது, எதிர்க்கட்சிகள் கேட்கிற கேள்விகளுக்கு உரிய பதில்களை தருவதற்கு முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் யாருக்கும் தெரியவில்லை.

எங்களது இளந்தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேட்கும் கேள்விகளை பார்க்கும் பொழுது அந்த காலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை நினைவுபடுத்துகிறது. கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும்போது புள்ளி விபரங்களோடு பேசுவார். அவரது வாரிசாக தான் இன்று உதயநிதி அவர்களும் இந்த 100 நாள் ஆட்சியில் நடைபெற்ற கொலைகள், கொள்ளைகள் லாக்கப் மரணங்கள் ஆகியவை குறித்து ஆதாரங்களோடு எடுத்துப் பேசும் பொழுது, அதற்கு உரிய பதிலை தர முதலமைச்சரால் முடியவில்லை.

**பதிலளிக்காமல் திசை திருப்பும்**
**முதல்வர்!**

கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், எடுத்துக்கொண்ட மூன்று நாள் அவகாசத்தில் தேடி தேடியும் எதுவும் கிடைக்காததால் சட்டமன்றத்தில் திசை திருப்பும் போக்கில் தேவையற்ற பேச்சுக்களை முதலமைச்சர் பேசுகிறார். சுகபோக வாழ்க்கை வாழும் முதலமைச்சருக்கு மிசா சட்டத்தின் கொடுமைகள் பற்றி தெரிய வாய்ப்பில்லை தான். தளபதி ஸ்டாலின் அவர்களோடு சிறையில் இருந்து ஸ்டாலின் அவர்களை தாக்கியபோது அவர் மீது படுத்து அவருக்கு விழும் அடிகளை தான் தாங்கிக்கொண்டு , அதனால் ஏற்பட்ட படுகாயங்களால் உயிரைத் துறந்தார் சிட்டிபாபு. சிட்டிபாபு மட்டும் அன்றைக்கு ஸ்டாலின் அவர்களை காப்பாற்றவில்லை என்றால் போலீசாரின் கொடுமையான தாக்குதலுக்கு ஸ்டாலின் அவர்கள் அன்றே இறையாகி இருப்பார்.

அன்றைய காலகட்டத்தில் சிறைச்சாலையில் ஸ்டாலின் அவர்களை கலைஞர் அவர்களுடன் நானும் சென்று பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது ஸ்டாலின் அவர்கள் எப்பொழுதும் போல் போடும் அரைக்கை சட்டையோடு இல்லாமல் முழு கை சட்டை அணிந்து வந்தார், அதன் பின்னர் விசாரித்தபோது, சிறையில் காவலர்கள் தாக்கியதில் உடம்பு மற்றும் கைகளில் எல்லாம் காயத் தழும்புகள் ரத்தக் கரைகள் இருந்ததால், கலைஞருக்கு அது தெரியக்கூடாது என்ற எண்ணத்தில் முழு கை சட்டை அணிந்து வந்தது தெரிய வந்தது. இவையெல்லாம் நடந்த வரலாறு.

**மிசாவில் பல்வேறு கொடுமைகள்!**

சிட்டி பாபுவின் டைரி என்ற புத்தகத்தில் மிசா காலத்தில் சிறையில் நடந்த கொடுமைகளை எழுதியுள்ளார். இன்றைய தலைமுறையினர் அதையெல்லாம் படிக்க வேண்டும்.

ஒரே சிறிய அறையில் 10 பேரை அடைத்து வைப்பார்கள். ஜெயிலுக்குள் செல்லும் பொழுதே, சிறை அதிகாரிகள் எட்டி உதைப்பார்கள். பின்னர் ஆடைகளை முழுவதும் அகற்றி நிர்வாணமாக்கி, அரைஞாண் கயிறை அறுத்து, அங்க மச்ச அடையாளத்தை குறித்துக் கொள்வார்கள். இதுபோன்று கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்களும் அப்போது மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களும் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இப்படிப்பட்ட தியாகத்தை, மிசா கொடுமைகளின் சித்திரவதைகளை அனுபவித்த எங்கள் தலைவரை முதலமைச்சர் விஜய் கொச்சைப்படுத்தி பேசியிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது,

**வரலாறு தெரியாது;**
**புரிந்து கொள்ளவும் முடியாது!**

முதலமைச்சர் விஜய் அவர்களே யாரோ எழுதிக் கொடுத்ததை சட்டமன்றத்தில் பேசுகிறீர்கள். உங்களுக்கு வரலாறும் தெரியாது, வரலாற்றை புரிந்து கொள்ளவும் முடியாது.

உங்களது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையே உங்களுக்கு அடையாளம் தெரியாது. யார் யார் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று பெயர் கூட உங்களுக்கு தெரியாது. இப்படிப்பட்ட நீங்கள் தி.மு.க. பற்றியும், தி.மு.க.வின் தலைவரை பற்றியும் பேச கொஞ்சம் கூட உங்களுக்கு தகுதி கிடையாது. தி.மு.க. தலைவரை முதலமைச்சர் தரம் தாழ்த்தி பேசியதை அனைத்து கட்சி தலைவர்களும் கண்டித்துள்ளார்கள். ஆனால் நம்மால் ஆதாயம் பெற்று வெற்றி பெற்ற, தற்பொழுது சுகபோக வாழ்க்கை அனுபவிக்கிற காங்கிரஸார் மட்டும் வாயை திறக்கவில்லை.

காங்கிரசில் இரண்டு வகை உண்டு. ஒன்று பக்கா காங்கிரஸ், இன்னும் ஒன்னு சொக்கா காங்கிரஸ்.

அந்த காலத்தில் கொள்கையை அடிப்படையாக வைத்திருந்தவர்கள் பக்கா காங்கிரஸ். இப்பொழுது கொள்கையை விட்டுவிட்டு பதவி சுகத்தை அனுபவிப்பவர்கள் சொக்கா காங்கிரஸ்.

இறுதியாக இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றை மட்டும் முதலமைச்சரை விஜய் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க.வை பழித்தவர்கள் யாரும் வாழ்ந்ததாக சரித்திரம் கிடையாது. விஜய் நீங்கள் பேசிய தரங்கெட்ட பேச்சினால் மக்கள் கொதித்து எழுந்துள்ளனர். நிச்சயம் விஜய் அவர்கள் விரைவில் கட்சியை கலைத்து விட்டு ஓடும் நிலை ஏற்படும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட 2000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தின் நிறைவாக மாநகர மேயர் பிரியா ராஜன் நன்றி கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முதலமைச்சர் விஜயைக் கண்டித்தும், அமைச்சர் நிர்மல் குமார் மற்றும் த.வெ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

---

### விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்

# திருவண்ணாமலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப். 14 –

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில், சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து, 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்றக் கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எ.வ. வேலு தலைமையில் நடைபெற்றது.

12.09.2026 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில், ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக்கொள்ள, கொச்சையான பேச்சுக்களை பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் மாறியிருக்கிறார். சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி., கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில்...

கண்டிக்கின்றோம்! கண்டிக்கின்றோம்! முதல்வர் விஜயின் தரங்கெட்டை பேச்சை கண்டிக்கின்றோம்! வாயை அடக்கு! வாயை அடக்கு! முதல்வர் விஜயே! வாயை அடக்கு! எங்கள் தலைவர் நடத்தியது ரியல் ஆட்சி! விஜய் நடத்துவது ரீல்ஸ் ஆட்சி!! ஒட்டாதே! ஒட்டாதே! கழக ஆட்சி சாதனைமீது ஸ்டிக்கரை வைத்து ஒட்டாதே!! கொலை, கொள்ளை தினம் நடக்குது! சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்குது!! ஏறிப்போச்சி ஏறிப்போச்சி! விலைவாசி ஏறிப்போச்சி கலஞ்சிப் போச்சி கலஞ்சிப்போச்சி விஜய் வேஷம் கலஞ்சிபோச்சி!!

பெருகி போச்சி, பெருகி போச்சி! போதைக் கலாச்சாரம் பெருகிப் போச்சி!! கேள்விக்குறி! கேள்விக் குறி!! பெண்கள் பாதுகாப்பு கேள்விக் குறி!! மாறிப்போச்சி! மாறிப்போச்சி! சட்டமன்றம், சர்கஸ் கூடாரமாய் மாறிப்போச்சி!! ஏறிப்போச்சி ஏறிப்போச்சி! விலைவாசி ஏறிப்போச்சி என கண்டன முழக்கங்கள் எழுப்பி, கொளுத்தும் வெயிலிலும் 1 மணிநேரத்திற்கும் மேலாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்று முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஓ.ஜோதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலிமணியன், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், அமைப்பு சாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம்,

தெற்கு, வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபாகரன், ஜெ.மெய்கண்டன், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி. து.வேலு, இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர். அன்பரசு, நா.மாசிலாமணி, கற்பகம் சரவணன், உ.நித்யா, இரா.ஆறுமுகம், வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந. நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், செல்வபாண்டியன், என். கே.ஏ.பாபு, அ.மணிகண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ.மதிவாணன், பி.செல்வராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.அசோக்குமார், டாக்டர் மகேந்திரன், இ.மணிகண்டன், மாலினி வினோத்திவாகரன், அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க. மணிவண்ணன், இப்ராஹிம் ஷெரீப், அப்சல்பாஷா, கே.ஏ.புஷ்பராஜ், சுந்தர்.கருணாநிதி, இராணி வேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் வ.மணிமாறன், கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், கோ.தனசேகரன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், டி.ராதா, எம்.சுந்தர், துரை.மாமது, எஸ்.மோகன், ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், எஸ்.ரவிக்குமார், ஏ.ஜி.திராவிட முருகன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், ஏ.சுந்தரேசன், ஆர்.மகேஷ்,


தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்க்குழு உறுப்பினர்கள்ஏ .சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ண மூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ் பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

நகர செயலாளர் மு.அன்பழகன், தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், கே.கோவர்த்தனன், வேணிஏழுமலை, டி.கே. மோகன், பகுதி கழக பொறுப்பாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ். அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

---

# திவால்...!

**ரூ.6 கோடி செலவில் முதலமைச்சர் அறை நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாற்றம்**



**கோட்டையையே ரூ.1200 கோடி செலவில் பட்டினப்பாக்கத்துக்கு மாற்றம்...**

**எம்.எல்.ஏ.க்களுக்கு சொகுசு கார்...**

**கார் பந்தயம் பார்ப்பதற்கு அரசுச் செலவில் லண்டனுக்கு உல்லாச பயணம்**

**இப்படி ஊதாரித் தனத்தில் மூழ்கித் திளைக்கிறது கோட்டு மால் கோமாளி சர்க்கார்..**

**ஒருவேளை இந்த ஆட்சி**

**5 ஆண்டுகள் நீடித்தால் தமிழ்நாடு திவாலாகிவிடும்...**

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்